பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை 30.09.2025 கதிர் 324

### இனி இது ரகசியம் அல்ல!

அரசுத்தலைவர்நாடுதிரும்பியதும் தமிழ் அரசுக் கட்சியுடன் பேச நாள் ஒதுக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில்நேற்றுஒருதகவலை ☞2

# காற்றாலைத் திட்டத்தை எதிர்த்து முழுமையாக முடங்கிய மன்னார்

## அனைத்துப் பணிகளும் தடைப்பட்டன ஆயிரக்கணக்கில் திரண்டு மக்கள் போராட்டம்



மன்னாரில்முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை திட்டத்திற்கு எதிராகவும்,மக்கள்மீது பொலிஸார் மேற்கொண்டதாக்குதல்சம்பவத்தைக் கண்டித்து நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்த பொது முடக்கப் போராட்டத்தால் தீவு முழுவதிலும் அனைத்துப்பணிகளும்தடைப்பட்டன. நகரில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டத்திலும் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மன்னார் மாவட்டம் முழுவதும் நேற்று பொது முடக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மன்னார் பிரஜைகள் குழு மற்றும் போராட்டக்குழு இணைந்து குறித்த அழைப்பு விடுத்திருந்தனர். ☞2

## இலங்கையுடனான கூட்டாண்மையை மேலும் விரிவுபடுத்த ஜப்பான் ஆர்வம்

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான இடமாக அமைந்துள்ள இலங்கையின் உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது அதற்கமைய இலங்கையுடனான கூட்டாண்மையை மேலும் மேம்படுத்தி விரிவாக்க எதிர்பார்ப்பதாக ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா தெரிவித்தார்.

ஜப்பான் அரசின் அழைப்பின்பேரில் ஜப்பானுக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார வரவேற்கும் நிகழ்வு ஜப்பான் பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

ஜப்பான் பிரதமர் அலுவலகத்திற்கு வருகை தந்த அரசுத் தலைவர்க்கு ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபாவினால் மகத்தான வரவேற்பு அளிககப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அரசுத் தலைவர் அநுரகுமார ஜப்பானிய சுய பாதுகாப்புப் படையின் மரியாதையை ஏற்றுக்கொண்டதுடன், அந்த அணிவகுப்பை பார்வையிடவும் செய்தார்.

இருநாட்டு பிரதிநிதிகள் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்கவிற்கும் ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபாவுக்கும் இடையிலான சந்திப்பு தொடங்கியது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நெருங்கிய நட்புறவைத் தொடர்ந்து பலப்படுத்தி, ☞2

## ஜப்பான் நிதி அமைச்சருடன் அநுரகுமார மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றி ஆராய்வு

ஜப்பானிய உதவி, ஜெய்கா ஒத்துழைப்பின் கீழ் இலங்கையில் தற்போது செயல்படுத்தப்படும் மற்றும் செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் புதிய திட்டங்கள் குறித்து அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், ஜப்பான் நிதியமைச்சர் கதோ கசுனோபும் கலந்துரையாடினர்.

டோக்கியோவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றசந்திப்பின்போதுஜப்பானிய நிதியமைச்சர் கதோ கசுனொபுவுடன் அரசுத் தலைவர் இருதரப்பு பேச்சில் இணைந்துக்கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம்,முதலீடுமற்றும்பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், ஜப்பானிய உதவி, ஜெய்கா ஒத்துழைப்பின் கீழ் இலங்கையில் தற்போது செயல்படுத்தப்படும் மற்றும் செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் புதிய திட்டங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## லஞ்சம், ஊழலை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு பன்னாட்டு நாணய நிதியத் தலைவர் வரவேற்பு

2026 வரவு செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை, வரி சீர்திருத்தம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கு ஆளும்தரப்பு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை பன்னாட்டு நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்திட்ட தலைவர் இவான் பாபகோர்ஜியோ வரவேற்றார்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் (ஞானிய்) இலங்கைக்கான செயற்திட்ட தலைவர் இவான்பாபகோர்ஜியோநேற்று அலரிமாளிகையில்பிரதமர்ஹரிணியைச் சந்தித்து இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டங்கள் குறித்து கலந்துரையாடினார்.

தற்போதைய சீர்திருத்தத் திட்டத்திற்கான ஆளும்தரப்பின் ☞2

## தண்டனைச் சட்டத் திருத்தம் மாணவரின் தன்பாலின ஆர்வத்தை ஊக்குவிக்குமாம்

### விமல் வீரவன்ஸவின் கண்டுபிடிப்பு இது

தண்டனைச் சட்டத் திருத்தம் சட்டமூலம் மாணவர்களின் ஒழுக்கத்தை சீர்குலைத்து தன்பாலின கலாசாரத்தை ஊக்குவிக்கும் சூழலை ஏற்படுத்தும்.இந்த சட்டமூலத்தை ஆளும்தரப்பு உடன் மீளப்பெற வேண்டும். இச்சட்டமூலத்தின் எதிர்விளைவுகளை மகாநாயக்கதேரர்களுக்குஎடுத்துரைப்போம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ☞2

## மாதாந்தம் 3 கோடி ரூபாய் ஜேவிபியின் நிதியத்துக்கு

### எம்.பிக்கள் சம்பளமாகச் செல்வதாக முறைப்பாடு

தேசியமக்கள்சக்தியின்159உறுப்பினர்கள் மாதாந்தம் சுமார் 3 கோடி ரூபாவை ஜேவிபி நிதியத்துக்கு வழங்கி மக்கள் நிதியை முறைகேடாக பயன்படுத்துவதாக குறிப்பிட்டு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில ஆளுங்கட்சியின் 159 உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் நேற்றுதிங்கட்கிழமை ☞2

## ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணங்களை பதிய முற்படும் அதிகாரிகளை பதவி நீக்குக

### கர்தினால் மல்க்கம் ரஞ்சித் ஆவேசம்

ஓரினசேர்க்கை திருமணங்களைப் பதிவுசெய்வதற்காகபல்வேறுவழிகளில் நாட்டுக்குள் பல செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளித்து சமூக சீரழிவை ஏற்படுத்த முயற்சிக்கும் அரச அதிகாரிகள் எந்தளவு உயர் அதிகாரத்தில் இருந்தாலும் அவர்களை பதவிநீக்க அரசுத்தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் ஒழுக்கமற்ற கலாசாரத்தை உருவாக்குவதற்கு எந்தவொரு அரசாங்கத்துக்கும் நாம் இடமளிக்கப் போவதில்லை என பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ☞6

## சிங்கள மக்கள் மகிந்தவை காட்டிக்கொடுத்துவிட்டனர்

### அருச்சுனா எம்.பி. கவலை தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ச போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாததால் எம்மைப் போன்றவர்களை இலக்கு வைக்கின்றனர். எனது கடவுள் பிரபாகரன் என்பதை அச்சமின்றி கூறுகின்றேன். ஆனால் சிங்கள மக்கள் தமக்காகச் சேவையாற்றிய மகிந்த ராஜபக்சவை காட்டிக் கொடுத்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்தார்.

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இங்கு பகிர்ந்திருந்தேன். அதையொட்டிய மற்றொரு தகவலையும் இங்கு தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

அநுரகுமாரவை தமிழ் அரசுக் கட்சி சந்தித்து ஒரு வருட காலமாகிவிட்டது. அநுர ஆட்சிக்கு வந்ததும் ஒரு தடவை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார். தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவருக்கு அண்மையில்எழுதியகடிதத்தில்கூட இதனைச் சுட்டிக்காட்டியிருந்தது. 2024 டிசெம்பரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனின் கோரிக்கையின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது வடக்கில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்துப் பேசுவதற்காகவே சிறீதரன் நேரம் ஒதுக்கிதரும்படி கேட்டிருந்தார் என்று அரசுத் தலைவர் செயலகத் தகவல்கள் தெரிவித்தன. அதனடிப்படையிலேயே அந்தச் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் வெள்ளப் பாதிப்புக் குறித்துத்தான் அரசுத;தலைவருடனானசந்திப்புஎன்பதுதமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஓரிவரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. குறிப்பாகசாணக்கியன்உள்ளிட்டமுக்கியமான நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குத்தெரியாது. இதனால் அரசியல் தீர்வு, புதிய அரசமைப்பு, மாகாண சபைத் தேர்தல்கள் என்பன பற்றி ஆராயும் நோக்கத்துடனேயே அவர்கள் சென்றிருந்தனர்..

இருப்பினும் கூட்டம் வெள்ளப் பிரச்சினையில்கவனம்செலுத்தியதால், தமிழ் அரசுக்கட்சியின்மற்றஉறுப்பினர்களால்அந்த நேரத்தில் அரசியல் பிரச்சினைகள் குறித்து குறிப்பாக விவாதிக்க முடியவில்லை. அதன் பின்னர்அரசுத்தலைவராகஅநுரவுக்கும்தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையே அதிகாரப்பூர்வ பேச்சு என்றுகூட எதுவும் நடக்கவில்லை. இந்தக் காலத்தில் தமிழ் அரசுக் கட்சியும் சந்திப்புக்குக் கோரவில்லை. அநுரவும் சந்திப்புக்கு அழைக்கவில்லை.

இந்தப் பின்னணியில், தமிழ் அரசுக் கட்சியின் மத்தியக் குழு செப்டெம்பர் 14 அம்பாறையில் கூடி அரசுத் தலைவருடனான சந்திப்புக்குக் கோருவது என்று முடிவு செய்தது. இந்தமுறை பேச்சு நடந்தால் அது மொத்த தமிழ் அரசுக் கட்சியுடனானதாக இருக்கும். நாடாளுமன்றக்குழுவுடனானதாகஇருக்காது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காற்றாலைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து நேற்றுக் காலை முதல் மன்னார் பஜார் பகுதி உள்ளடங்களாக அனைத்து பகுதிகளிலும் இருந்த வர்த்தக நிலையங்கள்அனைத்தும்மூடப்பட்டிருந்தன. தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. பல்வேறு கிராமங்களில் உள்ள மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்லவில்லை.

இந்த நிலையில் காலை 10.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடினர்.

பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டன பேரணி தொடங்கியது.

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல்,மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பொலிஸாரினால் பொதுமக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களை கண்டித்து குறித்த பேரணி தொடங்கியது.

குறித்தபோராட்டத்திற்குஆதரவுதெரிவித்து கொழும்பில் இருந்து போராட்டக்குழு ஒன்று வருகை தந்தது. மேலும் வடக்கில் உள்ள சில மாவட்டங்களில் இருந்தும் ஆதரவு தெரிவித்து சமூக செயல்பாட்டாளர்களும் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். பொதுவிளையாட்டுமைதானத்தில்தொடங்கிய பேரணி பொது வைத்தியசாலை வீதியூடாக சென்றுமன்னார்பொலிஸ்நிலையவீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது.

பின்னர்மன்னார்மாவட்டச்செயலகத்திற்கு முன் ஒன்று கூடிய மக்கள் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதனால் குறித்த பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது.பின்னர் மன்னார் மாவட்டச் செயலாளர் கனகேஸ்வரன் மக்கள் ஒன்று கூடி இடத்திற்கு வருகை தந்தார்.

போராட்டக்குழு சார்பாக அரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டிய கடிதம் மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளிக் கப்பட்டது. கடிதத்தைப் பெற்றுக்கொண்ட மாவட்டச் உடனடியாக மேலதிக நடவடிக் கைகளை முன்னெடுப்பார் எனத்தெரிவித்தார். இதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாகக் கவனவீர்ப்புப் போராட்டம்இடம்பெறும்பகுதிக்குச்சென்றனர்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் போராட்டத்தில்ஈடுபட்டவர்கள்மீதுபொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட நிலையில் தாக்குதலை மேற்கொண்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை எழுப்பினர்.

இதனால் பொலிஸாருக்கும் போராட்டக் காரர்களுக்கும் இடையில் முருகல் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் கலகம் அடக்கும் பொலிஸார்அவ்விடத்திற்குஅழைக்கப்பட்டனர். பின்னர் தொடர்ச்சியாக முறுகல் நிலை ஏற்பட்ட நிலையில் மத தலைவர்கள் அவ்விடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கதைத்து அவ்விடத்தில் இருந்துஅனைவரையும்அகற்றினர்.அதனை தொடர்ந்து பஜார் பகுதியில் நின்று தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

மேலும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றகாற்றாலைகோபுரங்கள்அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.மக்கள் மீது தாக்குதல்நடத்தியபொலிஸார்மீதுநடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.குறித்த போராட்டத்தில் சர்வமத தலைவர்கள்,பல ஆயிரக்கணக்கான மக்கள் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## தண்டனைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தண்டனைச் சட்டக்கோவை திருத்தம் சட்டமூலத்தை ஆளும்தரப்பு அவசரமாக நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்துள்ளது.இந்த சட்டமூலம் குறித்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

கல்வி அமைச்சராக பிரதமர் ஹரிணி இந்த சட்டமூலம் பற்றி குறிப்பிடுகையில், பாடசாலை மாணவர்களைமாத்திரம்இலக்காகக்கொண்டு இந்தத் திருத்தம் கொண்டுவரப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். இந்த சட்டமூலத்தில் அவமானப்படுத்தல் என்பதற்கு முறையான வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை.

இந்தச் சட்டமூலத்தின் ஊடாக புதிய லிபரல்வாத கொள்கை மற்றும் தன்பாலின கலாசாரம் ஆகியவற்றை செயற்படுத்தவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது.இலங்கையின் பாரம்பரியமான குடும்ப முறைமையை இல்லாதொழிக்கவேஆளும்தரப்புஇவ்வாறான சட்டமூலங்களைக் கொண்டு வந்துள்ளது.

இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் மாணவர்கள் பாடசாலைக்கு பொருத்தமற்ற ஆடையிலோ அல்லது உடலில் பச்சை குத்திக் கொண்டோ வந்தால் ஆசிரியர்களால் அவர்களைத் தண்டிக்க முடியாத நிலை ஏற்படலாம். அவ்வாறு தண்டித்தால் மாணவர்கள் அதனை அவமானப்படுத்தலாக கருதி ஆசிரியர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம். இந்தச் சட்டமூலம் சமூக கட்டமைப்பில் குறிப்பாக பாடசாலை கல்வி கட்டமைப்பில் வீண் முரண்பாடுகளை ஏற்படுத்தும்.ஆகவே இந்த சட்டமூலத்தை ஆளும்தரப்பு உடன் வாபஸ் பெற வேண்டும்.மகாநாயக்க தேரர்கள் இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என்று வலியுறுத்துவோம் என்றார்.

## மாதாந்தம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடளித்ததன் பின்னர் உதய கம்மன்பில செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான தேவானந்த சுரவீர 'நாங்கள் அனைவரும் எமது மாதாந்த சம்பளத்தை ஜேவிபியின் நிதியத்துக்கு முழுமையாக வழங்குகிறோம்.கட்சி கொடுக்கும் நிதியில் இருந்து தான் வாழ்கிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது மாத சம்பளத்தை தனது விருப்பத்துக்கேற்ப செலவு செய்ய முடியாது. செலவு செய்யும் முறைமை தொடர்பில் நிச்சயிக்கப்பட்ட விடயதானங்களில் தெளிவாகக்குறிப்பிடப்பட்டுள்ளது.நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மாதாந்த கொடுப்பனவு, வருகைக்கான கொடுப்பனவு மற்றும் குழுக்களில் பங்குப்பற்றுவதற்கான கொடுப்பனவுஎன்றமூன்றுகொடுப்பனவுகளை மாத்திரம்தனதுவிருப்பத்துக்கேற்பபயன்படுத்த முடியும். விருந்துபசார கொடுப்பனவு, தொலைபேசி மற்றும் வாகனத்துக்கான கட்டண கொடுப்பனவு, அலுவலக கொடுப்பனவு,எரிபொருள் கொடுப்பனவு ஆகிய கொடுப்பனவுகளை கட்சியின் நிதியத்துக்கு வழங்கி அவற்றை அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவது மக்கள் நிதியை முறைகேடாக பயன்படுத்துவதாகும்.

தேசிய மக்கள் சக்தியின் 159 உறுப்பினர்களும் ஒவ்வொரு மாதமும் 3 கோடி ரூபாய் மக்கள் நிதியை முறைகேடாக தமது கட்சியின் நிதியத்துக்குவழங்கியுள்ளார்கள்.இவர்களுக்கு எதிராகஇலஞ்சம்அல்லதுஊழல்ஆணைக்குழு முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தில் எவருக்கும் சிறப்பு சலுரக வழங்கப்படாது என்பதை ஆளும்தரப்பு தாரக மந்திரமாக குறிப்பிடுகிறது.159 பேருக்கு எதிராக சட்டம் எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது என்பதை எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## சிங்கள மக்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று திங்கட்கிழமை நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரன் எனது கடவுள் என்பதே எனது நிலைப்பாடாகும். எனக்காக உயிர் நீத்தவர்களுக்காக நான் முன்னிற்கின்றேன். ஆனால் இந்நாட்டு மக்கள் தமக்காக உயிர் நீத்த படையினருக்காக முன்னின்ற தமது தலைவரை காட்டிக் கொடுத்துள்ளனர். மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் தலைவர் அல்லர், ஆனால் அவர் சிங்கள மக்களின் தலைவராவார். ஆனால் அவர்கள் மகிந்த ராஜபக்சவை காட்டிக் கொடுத்துள்ளனர்.

நாமல் உள்ளிட்டோர் கள்வர்கள் எனக் கூறியபோது நானும் அவற்றை நம்பினேன். முழு நாடும் அதை நம்பியது. பொய் கூறியவர்களுக்கு மேலாக பாரிய பொய்களைக் கூறுபவர்கள் வந்ததும் அனைவரும் அவர்களை நம்பினர். ஆனால் இறுதியில் அவர்களது பொய்கள் அனைத்தும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன.

எனக்காக முன்னிலையானமைக்காக நாமலுக்கு மதிப்பளிக்கின்றேன். நாமல் தவறிழைத்துள்ளார் எனில் அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதனை விடுத்து சிறுபிள்ளைத்தனமாக செயற்பட வேண்டாம். தும்புத்தடி எழுந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். நான் தும்புத்தடியாக இருக்கின்றேனாஅல்லதுஅமைச்சர்களும்,பிரதி அமைச்சர்களும்அவ்வாறு இருக்கின்றார்களா என்பதை மக்கள் சிந்திக்கவேண்டும்.

மகிந்த ராஜபக்ச போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாததால் எம்மைப் போன்றவர்களை இலக்கு வைக்கின்றனர். ஒன்றில் என்னைக் கைது செய்வர். அல்லது சாமர சம்பத் தசநாயக்கவை கைது செய்வர். நாமிருவரும்இல்லைஎன்றால்ஆளுங்கட்சிக்கு அரசியலும் இல்லை. பிரபாகரன் எனது தலைவர் என்பதை நான் அச்சமின்றிக் கூறுகின்றேன். அவர் பயங்கரவாதியா என பல முறை கேள்வியெழுப்பியும் யாரும் அதற்குப் பதிலளிக்கவில்லை.

அந்தக் கேள்விக்கு பதிலளித்தால் வடக்கில் வாக்கு வங்கி வீழ்ச்சியடையும் என்பது அங்கிருப்போருக்கு தெரியும். என்னை பைத்தியம் என்று கூறுவதால் எனக்கு கவலையில்லை. ஆனால் நான் ஓரினச் சேர்க்கையாளன் அல்லன் என்றார்.

## லஞ்சம்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்பாட்டை பாபகோர்ஜியோ பாராட்டினார், குறிப்பாக நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் ஊழலை இல்லாதொழிப்பதற்கும்எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்றார்.

வரிக் கொள்கைச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தையும், குறிப்பாக விலக்குகள் தொடர்பாகவும், 2026 வரவு செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பு அமைப்புக்காக வளங்களை ஒதுக்குவதையும் வரவேற்றார்.

பொருளாதார முன்னேற்றம் மக்களின் தேவைகளுடன் ஒத்துப்போக வேண்டும் என்றார் பிரதமர். தரமான முதலீடுகளை ஈர்ப்பதில் ஆளும்தரப்பின் முன்னுரிமையை பிரதமர் இதன்போது வலியுறுத்தினார். சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவது மிக முக்கியமானது என்றாலும் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களை மேம்படுத்துவது அவசியம் என்றும் அமரசூரியா எடுத்துரைத்தார்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்னுரிமைகளைச் சுட்டிக்காட்டிய காட்டிய பிரதமர், கிராமப்புற பொருளாதார பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை,குறிப்பாகஅரசதுறைமூலம் டிஜிட்டல் மயமாக்கலை விரைவுபடுத்துதல், உள்கட்டமைப்புமேம்பாட்டைமேம்படுத்துதல், சுற்றுலாத் துறையில் தரமான மேம்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் விவசாயத்தை வலுப்படுத்துதல்ஆகியவற்றின்முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி மார்த்தா வோல்டெமைக்கேல், இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதிஅலுவலகத்தின்பொருளாதார நிபுணர் மனவீ அபேயவிக்ர, மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகள், உதவி ஆளுநர் அமரசேகர, மாற்று நிர்வாக பணிப்பாளர் ஹரிச்சந்திரா, பொருளாதார ஆராய்ச்சி திணைக்கள பணிப்பாளர் பத்பேரியா; மற்றும் பொருளாதார ஆராய்ச்சி கூடுதல் பணிப்பாளர் விக்ரமாராச்சி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

## இலங்கையுடனான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருநாடுகளுக்கும்இடையில்வர்த்தக, முதலீடு, பொருளாதார, அபிவிருத்தி உதவி மற்றும் வலய பாதுகாப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கும் வகையில் பல்வேறுபட்ட துறைகளிலான ஒத்துழைப்பை தொடர்ந்து பரவலாக்குவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இரு தரப்பினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியை தொடர்ந்தும் பிரதிபலிக்கும் வகையில், பால் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான திட்டம் மற்றும் உத்தியோகபூர்வ பாதுகாப்பு உதவி திட்டம் குறித்த பரிமாற்று ஆவணம் கைச்சாத்திடும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கூட்டு ஊடக சந்திப்பில் உரையாற்றிய ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா இந்துசமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான இடமாக அமைந்துள்ள இலங்கையின் உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தி மிகவும்முக்கியத்துவம்வாய்ந்தது என்றும் அதற்கமைய இலங்கையுடனான கூட்டாண்மையை மேலும் மேம்படுத்தி விரிவாக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க, பரஸ்பர நம்பிக்கைஇ கௌரவம் மற்றும் பலமான தொடர்பில்அடிப்படையிலே இலங்கை மற்றும் ஜப்பான் இடையிலான நீண்டகால நட்புறவு தங்கியுள்ளது. ஜப்பான் பிரதமருடனான பேச்சு இலங்கை -ஜப்பான் இடையிலான தொடர்புகளின் முக்கிய மைல்கல்லை குறிப்பதாகவும் அந்த உடன்பாடுகளின் முழுமையானபயனைஅடைந்துஅபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடுக்கான பயணத்தில் ஜப்பானுடன் இணைந்து பணியாற்ற இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜப்பான் அரசின் ஒத்துழைப்புடன் இலங்கையில் தொடங்கப்பட்டு பொருளாதார நெருக்கடியினால் இடையில் கைவிடப்பட்ட 11 அபிவிருத்தித் திட்டங்களை மீளத் தொடங்குவது, அதன் பயனை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காகஜப்பான்ஆளும்தரப்பு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதிய கடன்மறுசீரமைப்புதிட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக அரசுத் தலைவர் இந்தச் சந்தர்ப்பத்தில் ஜப்பானுக்கு நன்றி தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் ஜப்பான்பிரதமர்ஷிகெருஇஷிபா இடையிலான உத்தியோகபூர்வ பேச்சின் பின்னர் இருதரப்பினால் கூட்டு அறிக்கையொன்று ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டன.

# உலக உணவு இந்திய நிகழ்வில் வர்த்தக அமைச்சர் சமரசிங்க

வர்த்தகம், வர்த்தகத்துறை, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுத் துறை அமைச்சர் வசந்த சமரசிங்க, அமைச்சின் செயலாளர் விமலேந்திரராஜா உள்ளிட்ட குழுவினருடன் கடந்த 24 - 26 வரை டில்லிக்கு பயணம் செய்து உலக உணவு இந்தியா நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்தப் பயணத்தின்போது, அமைச்சர் வசந்த சமரசிங்க, இந்திய உணவுப்பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் சிராக் பஸ்வான் மற்றும் கூட்டுறவுத் துறை இணையமைச்சர் முரளீதர் மோஹோல் ஆகியோருடன் சந்திப்புகளை நடத்தினார்.

இந்தச் சந்திப்புகளில் உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், இருநாடுகளுக்கும் பொதுவான ஆர்வம் உள்ள மற்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்துப்பயணத்தின்போது, 'உணவுப் போக்குவரத்து முறை மாற்றத்திற்கான ஒரு வினையூக்கியாக உணவு இழப்பு மற்றும் வீணாதல்' என்ற தலைப்பிலான கருப்பொருள் அமர்வில் அமைச்சர் உரையாற்றினார்.

இதில் இலங்கையின் நிலைப்பாடுகளைப் பகிர்ந்துகொண்ட அவர், உணவு வீணாதல் சவால்களை, உணவு அமைப்புகளின் நிலைத்தன்மை மற்றும் மீள்திறனை கூட்டாக அணுகுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

நிகழ்வில் மேலும் உரையாற்றிய அமைச்சர், தேசிய கூட்டுறவு ஏற்றுமதி லிமிடெட் மற்றும் தேசிய விவசாயக் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட் ஆகியவற்றின் நிர்வாக பணிப்பாளர்களையும் சந்தித்தார்.

விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள், திறன் மேம்பாடு, மற்றும் கூட்டுறவு மாதிரிகள், விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் பொருட்கள் வர்த்தகம் ஆகியவற்றில் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும், முன்னணி விவசாய வணிகம் மற்றும் உணவு நிறுவனங்களின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரிகளுடனும் அமைச்சர் கலந்துரையாடினார். உலக உணவு இந்தியா - 2025 நிகழ்வின் ஒரு பகுதியாக, தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் அவர் கலந்துரையாடினார்.

இது உணவுப் பதப்படுத்துதல், விவசாயம் மற்றும் தொடர்புடைய துறைகளில் பங்களிப்புகள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றங்களை ஆராய்வதற்கான தளமாக அமைந்தது.

இந்த பயணம், பொருளாதார ஒத்துழைப்பை மேலும் ஆழப்படுத்தவும், உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டில் புதிய கூட்டாண்மை வழிகளை ஆராயவும் இரு நாடுகளின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியதாக கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகம் தெரிவித்துள்ளது.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## புதிய அபாயச் சமிக்ஞை

இலங்கையில் போதைப் பொருட்களின் பரவல் நாள்தோறும் புதிய பரிமாணங்களைஅடைகிறது. 'ஐஸ்' எனப்படும்கிரிஸ்டல்மெத்தாம்பெட்டமைன் (Crystal Methamphetamine) போதைப்பொருள் கண்டுபிடிப்புகள், கடத்தல்கள், சில உற்பத்தி நிலையங்கள் என பல்வேறு அச்சுறுத்தல்களை வெளிக்கொண்டு வந்துள்ள நிலையில், நேற்று (29) தென்னிலங்கையில் புதிதாக ஒரு மிக ஆபத்தான செயற்கைத் தூண்டி (synthetic stimulant) போதைப்பொருள் 'மெபெட்ரோன் (Mephedrone)' முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### அபாயகரமான புதிய போதைப்பொருள்

தெற்கு மாகாண மூத்த பிரதி காவல் துறைத் தளபதி கித்சிறி ஜயலத் தெரிவித்த தகவலின்படி செப்டெம்பர் 21 வெலிகமவில் கைது செய்யப்பட்ட மோல்டோவா நாட்டைச் சேர்ந்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருளை அரச இரசாயன ஆய்வாளர் பரிசோதித்ததில் அது மெபெட்ரோன் என உறுதிசெய்யப்பட்டுள்ளது. காவல்துறை தகவலின்படி, இந்தப் பொருள் கிரிஸ்டல் மெத்தாம்பெட்டமினைவிட கூடுதல் ஆபத்தானது.

மெபெட்ரோன், 'ட்ரோன்', 'மியாவ் மியாவ்', 'எம்–கேட்' போன்ற பெயர்களால் உலகளவில் பரவலாக அறியப்படுகிறது. 2000களின் தொடக்கத்தில் 'பார்ட்டி டிரக்' (party drug) சந்தையில் தோன்றிய இந்தப் பொருளை, 2010ஆம் ஆண்டு ஐ.நா போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் அலுவலகம் (UNODC) உலகளாவிய அச்சுறுத்தலாக வகைப்படுத்தியது. இந்தியாவில் கூட கடந்த வருடம் 20 கிலோ கிராம் அளவிலான மெபெட்ரோன் கைப்பற்றப்பட்டது. இதன் பரவல் தென்காசியப் பிராந்தியத்தையும் சென்றடைந்துள்ளது என்பது மிகக் கவலைக்குரியது.

### மெபெட்ரோன் என்றால் என்ன?

மெபெட்ரோன் என்பது ஆம்பெட்டமின் மற்றும் கத்தியனோன் வகையைச் சேர்ந்த ஒரு செயற்கைத் தூண்டி மருந்தாகும். பொதுவாக வெண்மையான தூள், மஞ்சள் கலந்த தூள் அல்லது கண்ணாடி முத்திரைகள் போலக் காணப்படும். இதனை 'கோகெய்ன்' போல மூக்கின் வழியே உட்கொள்வது, மாத்திரைகள் அல்லது காப்ஸியூல்கள் வடிவில் விழுங்குவது, புகைப்பது போன்ற முறைகளில் பயன்படுத்துகின்றனர். சிலர் ஊசி மூலமும் பயன்படுத்துவதாக அறிக்கைகள் உள்ளன.

இதன் விளைவாக, ஒருவருக்கு உற்சாகம், நம்பிக்கை, பேச்சுத்திறன், தற்காலிக அன்பு உணர்வு போன்றவை அதிகரிக்கலாம். ஆனால் அதே நேரத்தில் அச்சம், கவலை, வாந்தி, தலைவலி, உணவுத் தேவை குறைவு, மூளைக்கான அதிக அழுத்தம், இதயத் துடிப்பு, தூக்கமின்மை, வெப்பநிலை சீர்குலைவு போன்ற மோசமான பக்கவிளைவுகளும் தோன்றுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தின் தேசிய சுகாதார சேவை (NHS) எச்சரிக்கையின்படி, இதனை அதிகமாக பயன்படுத்துவோருக்கு மூக்கில் இரத்தக் கசிவு, இதயம் மற்றும் இரத்த ஓட்டச் சீர்குலைவு, அதிக சூடு காரணமான இறப்புகள், குருதிக் குழாய்களில் சேதம், காய்ச்சல்கள், நினைவிழப்பு, பற்களை அரைப்பது போன்ற பல தீவிர விளைவுகள் ஏற்படுகின்றன.

### பழக்கத்திலிருந்து அடிமைத்தனத்திற்கு

இது மெபெட்ரோன், 'எக்ஸ்டசி' (ecstasy) போன்ற மருந்துகளைவிட மூளையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது மூளையை வேகமாகச் சென்றடைகிறது, உடல் அதனை வேகமாகக் கழித்துவிடுகிறது. அதனால் ஒருவருக்கு விரைவில் 'உச்ச' உணர்வு ஏற்பட்டு, மீண்டும் மீண்டும் பயன்படுத்த வேண்டிய நிலை உருவாகிறது. இதுவே 'பிஞ்ச்' (binge) பயன்பாட்டை அதிகரித்து அதிகப்படியான அளவில் உட்கொள்ளல் (overdose) அல்லது நீண்டகால அடிமைத்தனம் (addiction) எனும் மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கிறது.

### சமுதாயத்தின் பொறுப்பு

இலங்கையின் 'பார்ட்டி கலாசாரம்' நாளுக்கு நாள் வித்தியாசமான போதைப் பொருட்களை வரவேற்கும் சூழலை உருவாக்கி வருகிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அனைவரும் இளைஞர்களின் நடத்தையைக் கவனித்துப் பார்க்கவேண்டியது அவசியமாகிறது. தொடக்கத்திலேயே மருத்துவ ஆலோசனை மற்றும் காவல்துறை உதவி பெறுதல் என்பன பழக்கத்திலிருந்து மீள்வதற்கான முக்கிய வழிமுறையாகும்.

### அதிகாரிகளின் கடமைகள்

இந்தப் புதிய அபாயச் சிக்னலுக்கு உடனடி பதில் வழங்குவது காவல்துறையினரின் மற்றும் அரசின் கடமையாகும். புதிய போதைப் பொருளின் அளவு, பரவல், சந்தை நுழைவு நிலை ஆகியவை வரைபடமாகக் கண்காணிக்கப்படவேண்டும். தடுப்பு நடவடிக்கைகள், சட்ட அமலாக்கம், விழிப்புணர்வு திட்டங்கள், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி நிகழ்வுகள் அனைத்தும் ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### சரியான அணுகுமுறை தேவை

மெபெட்ரோன் இலங்கைக்கு நுழைந்திருப்பது, போதைப்பொருள் எதிர்ப்பு போராட்டத்தில் புதிய மற்றும் அபாயகரமான கட்டமாகும். இப்போதாவது, அரசியல், சட்டம், கல்வி, மருத்துவம், குடும்பம் என முழு தேசத்தின் பங்களிப்பும் இணைந்த அணுகுமுறையும் தேவைப்படுகிறது.

இவ்வாறான "சாவுச் சந்தையின் புதிய நுழைவோர்" என்ற போதைப்பொருட்களுக்குஎதிராகத்தடுப்புநடவடிக்கைகள்எடுக்கப்படாவிட்டால், நாளைய தலைமுறையையே ஆபத்துக்குள்ளாக்கும் நிலை தவிர்க்க முடியாது.

# தங்காலை போதைப் பொருள் லொறிகளின் சந்தேகநபர்கள் மூவருக்கும் விளக்கமறியல்

தங்காலை சீனி மோதர பகுதியில் போதைப்பொருளுடன் மூன்று லொறிகள் கைப்பற்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களை ஒக்டோபர் 13 வரை விளக்கமறியலில் வைக்குமாறு தங்காலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று சந்தேகநபர்கள் வழக்கு விசாரணைக்காக மன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிவானால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தங்காலை சீனிமோதர மற்றும் கொடெல்லாவ பகுதியில் செப்டெம்பர் 22 (திங்கட்கிழமை) ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று லொறிகள் கைப்பற்றப்பட்டன. சீனிமோதர பகுதியில் இருந்த வீடொன்றிலிருந்தும் உயிரிழந்த நிலையில் இருவரது சடலங்களும், போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன. அன்றைய தினம் மாத்திரம் மேற்படி சுற்றிவளைப்புகளின்போது சுமார் 705 கிலோ கிராம் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், ரிவோல்வர் ரக 5 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

ஏற்கனவே சம்பவம் தொடர்பில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்த உனகுருவே துசிதவின் இரண்டு மகன்கள், போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட லொரிகளின் பதிவு செய்யப்பட்ட மூன்று உரிமையாளர்கள் மற்றும் லொறி சாரதி ஒருவர் என ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இரு லொறிகளின் உரிமையாளர்கள், ஒரு லொறி சாரதி மற்றும் சீனிமோதர பகுதியில் இருந்து வீட்டில் சடலமாக மீட்கப்பட்ட நபர் ஒருவரது மகன் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்காக தங்காலை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை கருத்தில் கொண்ட நீதிவான் சந்தேகநபர்களை ஒக்டோபர் 13 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# அமீரகத்தின் தூதர் காலித் சபாநாயகருடன் சந்திப்பு

ஐக்கிய அரபு அமீரகத்தின் இலங்கைக்கான தூதுவர் காலித் நாசர் அல் அமெரி இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை அண்மையில் நாடாளுமன்றத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன, 1979 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை இதன்போது சுட்டிக்காட்டியதுடன், இலங்கைக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான பண்டைய காலத்திலிருந்து வரும் வரலாற்றுத் தொடர்புகளை அவர் நினைவுகூர்ந்தார். மத்திய கிழக்கில் உள்ள இலங்கை சமூகத்தினர் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய அரபு அமீரகம் இலங்கை தயாரிப்புகளுக்கான 7வது பெரிய ஏற்றுமதித் தலமாக உள்ளது என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டியதுடன், வர்த்தக உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

தூதுவர் காலித் நாசர் அல் அமெரி, இலங்கையின் புவியியல் இருப்பிடம், திறமையான மனித வளங்கள், கனிமச் செல்வம், இயற்கை அழகு மற்றும் சுற்றுலாத்துறை மீதான ஈர்ப்பு உள்ளிட்ட மூலோபாய நன்மைகளை இதன்போது சுட்டிக்காட்டினார். அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்காக இவற்றை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அண்மையில் கையெழுத்திடப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டிய தூதுவர், இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த ஐக்கிய அரபு அமீரகம் ஆர்வமாக உள்ளதாகவும் இதன் மூலம் இலங்கைக்கு அதிக முதலீகள் வருவதற்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் ஐக்கிய அரபு அமீரகம் - இலங்கை வர்த்தக சபையை செயற்படுத்துவதற்கான தனது எண்ணத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

மேலும், இலங்கைக்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், நாடாளுமன்ற மற்றும் கலாசார ஒத்துழைப்பை ஊக்குவித்தல் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

# இந்திய – இலங்கை வலுச் சக்தித்துறை அமைச்சர்கள் இருவரும் சந்தித்து பேச்சு

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, இந்தியப் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறை அமைச்சரை சந்தித்து இலங்கை - இந்தியா வலுசக்தி ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பினால் புது டெல்லியில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட வலுசக்தி மாற்றம் உச்சி மாநாடு மற்றும் கண்காட்சியுடன் இணைந்தே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ள அமைச்சர் குமார ஜயக்கொடி , இந்திய மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியுடனான சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையேயான எரிசக்தி ஒத்துழைப்பை மேம்படுத்துவது, தற்போதைய கூட்டுத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது, மற்றும் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வது ஆகியவை குறித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியப் வலுசக்தித்துறை அமைச்சருடனான இந்தச் சந்திப்பில், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஒத்துழைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடல்களில் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான குறைந்தபட்ச விலையை உறுதிசெய்யும் வகையில், போட்டித்தன்மை வாய்ந்த கொள்வனவு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்திய உதவியுடன் இலங்கையில் ஒரு சூரிய சக்தி தகடுகள் உற்பத்தி வசதியை அமைத்தல், புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் இலங்கை ஊழியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்தல், நிறுவன மாதிரிகள் மற்றும் ஒப்பந்தங்கள் குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்களின்போது பல தொடக்க கட்ட ஒப்பந்தங்களும் எட்டப்பட்டதாக வலுசக்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வலுசக்தி நிறுவனங்களின் கட்டமைப்பு மாதிரிகள் குறித்தும், இலங்கையின் வலுசக்தித் துறை இலக்குகளை அடையவும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் இந்த மாதிரிகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்தும் அமைச்சர்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# புலம்பெயர் தொழிலாளரின் பிள்ளைகளின் கல்விக்கு நிதி

## அரசுத் தலைவர் நிதியத்தின் ஊடாக

அரசுத் தலைவர் நிதியத்தின் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்காக மாதாந்தம் நிதி உதவி வழங்கும் வேலைத்திட்டத்தை தொடங்கியிருக்கிறோம் என வெளிவிவகார, வெளிநாட்டுவேலைவாய்ப்புபதில் அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

புதிய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களின் ஒரு பகுதியாகவே அரசுத் தலைவர் நிதியம் ஊடாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மாணவர் உதவித்தொகை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை தொடங்கியிருக்கிறோம். அரசுத் தலைவர் நிதியம் என்பது மக்களுக்கு உரித்தாகவேண்டிய ஒன்றாகும். அது வரப்பிரசாதம் அல்ல.

தற்போது அது முறையாக மக்களின் உரிமையாக மாற்றப்பட்டுவருவதை நாங்கள் காண்கிறோம். என்றாலும் கடந்த காலங்களில் இந்த அரசுத்தலைவர் நிதியம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பேசப்பட்டது. தற்போது அந்தச் சகாப்தம் முடிந்துவிட்டது. மக்கள் மயமான ஆட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில், மக்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருப்பதை நாங்கள் காண்கிறோம்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரம், உயர்தரம் மற்றும் பல்கலைக்கழக கல்வி அல்லது தொழில் பயிற்சி பெறும் பிள்ளைகளுக்கு மாதாந்தம் 5000, 7000 மற்றும் 8000 ரூபா போன்ற நிதி உதவி பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கிய விடயமாகும்.

குறிப்பாக வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கு சென்று, அந்த தொழில் செய்யும் இடத்தில் பல்வேறு பிரச்சினைகள், நெருக்கடிகள், முறையாக சம்பளம் கிடைப்பதில்லை என்றால், அந்த குடும்பத்துக்கு பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. அந்த குடும்பம் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியடைய ஒருபா தும் இடமளிக்க முடியாது.

ஏதாவது இடர்கள், விபத்து அல்லது சிறைப்படுத்தல் ஏற்பட முடியும். அவ்வாறான பல்வேறு சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் கல்வி உரிமை மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. என்றாலும் அந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். அதற்குத் தேவையான சூழல் தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வருடம் ஜனவரி 1 முதல் இது செயற்படுகிறது. யாராவது ஒரு நபர் இந்த வருடம் ஜனவரி 1 முதல் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தால், அவர்களின் பிள்ளைகளுக்காக இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த நாட்டுக்கு அதிகமாக வெளிநாட்டு செலாவணியை எடுத்துக்கொண்டுவருவது புலம்பெயர்தொழிலாளர்களாகும். அதனால் அவர்களின் பிள்ளைகளுக்கு மாணவர் உதவித் தொகை வழங்குவதென்பது மிகவும் பெறுமதியான விடயமாகும். அது தொடர்பில் நடவடிக்கை எடுத்த அரசுத் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் மிகவும் நன்றி என்றார்.

# பன்னாட்டு தனியார் வங்கி இலங்கையில் செயற்பாட்டை நிறுத்துவது சாதாரணமல்ல

## அஜித் பி. பெரேரா எம்.பி. சுட்டிக்காட்டு

உலகில் நீண்ட வரலாற்றைக் கொண்ட தனியார் வங்கியொன்று இலங்கையில் அதன் அனைத்துச் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள தீர்மானித்துள்ளமை சாதாரண விடயமல்ல. இது இலங்கையில் வங்கி கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் தொடர்பில் எதிர்மறையான ஒரு போக்கினையே காண்பிக்கிறது. எனவே ஆளும்தரப்பு இவ்விடயத்தில் தலையிட்டு இதனை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின்பொருளாதாரம்தொடர்பில்மறைக்கப்பட்டநெருக்கடியொன்றுஉருவாகியுள்ளது. பொருளாதார நிபுணர்கள், நாட்டிலுள்ள முதலீட்டாளர்கள், வெளிநாட்டு நிறுவனங்களில் இன்னும் சில ஆண்டுகளில் இலங்கை செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன்களை மீள செலுத்தாவிட்டால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன. எமக்கு கற்பனை உலகில் வாழ முடியாது.

கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்பு உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காததால் நாடு பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டு, இறுதியில் ஆட்சியும் கவிழ்ந்தது. இவ்வாண்டின் 5 ஆண்டு ஆட்சி காலத்திலேயே மீண்டும் வெளிநாட்டு கடன்களை மீள செலுத்த வேண்டிய காலம் தொடங்குகிறது. வருடத்துக்கு சுமார் 5 பில்லியன் டொலரைச் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் நாட்;டில் ஒட்டுமொத்த அந்நிய செலாவணி இருப்பு 6 - 7 பில்லியன் டொலர் மாத்திரமே. வெளிநாட்டு கடன் மீள் செலுத்தலுடன் ஏனைய செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு நாட்;டின் அந்நிய செலாவணி இருப்பு ஆகக் குறைந்தது 12 பில்லியன் டொலராவாவது காணப்படவேண்டும். ஆனால் பொருளாதார வளர்ச்சி வேகம் அதற்கு ஏற்றதாக இல்லை. எனவே ஆளும்தரப்பு இதற்கு அரசியல் ரீதியான பதிலை வழங்காமல் பொருளாதார ரீதியிலான தீர்வினை முன்வைக்க வேண்டும்.

உலகில் நீண்ட வரலாற்றைக் கொண்ட தனியார் வங்கியொன்று இலங்கையில் அதன் அனைத்து செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளத் தீர்மானித்துள்ளமை சாதாரண விடயமல்ல. இது இலங்கையில் வங்கி கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் தொடர்பில் எதிர்மறையான ஒரு போக்கினையே காண்பிக்கிறது. எனவே இந்த வங்கி நாட்டில் அதன் செயற்பாடுகளை நிறுத்துவரத தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## ஓரினச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

திஹாரிய தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட ஆராதனையின் போதே பேராயர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் சில சமூக சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றன. இவை ஆட்சியமைக்கும் அரசாங்கங்களின் தீர்மானங்கள் அல்ல. ஆனால் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களாகும். அண்மையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை ஓரின சேர்க்கையாளர்கள் நாட்டுக்கு பயணம் செய்து சுற்றுலாத்துறையூடாக வருமானத்தை ஈட்டுவதற்கு சேர்யளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதைஇந்நாட்டுஆட்சியாளர்கள் அறிவார்களா? எதிர்கால சந்ததியினரை இவ்வாறு சமூக சீர்கேடுகளுக்குள் தள்ள முடியுமா? நாட்டில் சிறந்த வளம் மனித வளமாகும். மனித வளத்தில் முக்கியமானது பிள்ளைகளாகும். அவ்வாறிருக்கையில் பிள்ளை வளம் வேண்டாம் எனக் கூறி, பாலியலை மாத்திரம் முன்னிருத்தும் கலாசாரத்தை எவ்வாறு அங்கீகரிக்க முடியும்? இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எந்தவொரு அரசாங்கத்துக்கும் எம்மால் இடமளிக்க முடியாது.

எமது பிள்ளைகளை நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களேநாட்டின்எதிர்காலமாவர். ஓரின சேர்க்;கையை பிறவிக்குணமாகக் கொண்டவர்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களை ஓரங்கட்டுவது சிறந்ததல்ல. ஆனால் அதனை வாழ்க்கை முறைமையாக மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. இதனை பிள்ளைகள் மீது சுமத்துவதற்கும் இடமளிக்க முடியாது. ஓரின சேர்க்கையாளர்களான சுற்றுலாப்பயணிகளுக்கு எமது எதிர்கால சந்ததியினரை இரையாக்க முடியாது.

தற்போது சிறுவர்கள் பாதுகாக்கப்படாவிட்டால் நாடு அழிவடையும். இது அமெரிக்காவோ, அவுஸ்திரேலியாவோ அல்லது பிரித்தானியாவோ அல்ல. இது இலங்கையாகும். இலங்கைக்கு இவை அநாவசியமானவை. இவை நாட்டின் கலாசாரங்களை அழிக்கும் செயற்பாடுகளாகும். நாட்டில் ஒழுக்கமற்ற கலாசாரத்தை உருவாக்குவதற்கு எந்தவொரு அரசாங்கத்துக்கும் நாம் இடமளிக்கப்போவதில்லை. நாட்டில் அதியுயர் பதவியிலிருப்பவருக்கு இது தெரியுமா என்பது எமக்கு தெரியாது. இது குறித்து தெரிந்தால் அதனை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஓரின சேர்க்கை திருமணங்களைப் பதிவு செய்வதற்காக பல்வேறு வழிகளில் நாட்டுக்குள் பல செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் பெண்கள் இருவர் தேவாலயமொன்றில் அருட்தந்தையொருவரை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது என்ன? கிருஸ்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சில மேற்குலக நாடுகளில் கலாசாரம் சீரழிந்துவிட்டது. வருமானத்துக்காக அந்த கலாசாரங்களை எமது நாட்டில் ஊடுருத்த ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது.

அவ்வாறான வருமானம் எமக்கு தேவையில்லை. நாம் வறுமையைப் பழகிக் கொள்கின்றோம். நாட்டு மக்கள் வறுமையிலிருக்கின்றோம் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் எமக்கு ஒழுக்கமான கொள்கையொன்று இருக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளித்தால் நாட்டில் பிரச்சினைகள் அதிகரிக்கும். எனவே இவற்றுக்கு சேர்யளிப்பது குறித்து சிந்திக்க வேண்டாம்என அரசதலைவர்களுக்கும்கூறிக் கொள்கின்றோம். கலாசார சீரழிவுகளுக்கு இடமளிக்கும் அதிகாரிகள் எந்தளவு உயர்ந்த அதிகாரத்தில் இருந்தாலும் அவர்களை பதவி நீக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசுத் தலைவர்யிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

ரஷ்ய-உக்ரைன் போர் என்பது, இறையாண்மை என்ற கருத்தை மையமாக வைத்து, இரண்டு நாடுகளின் சுயநிர்ணய உரிமை மற்றும் தேசிய நலன்களைப் பற்றிய ஒரு சிக்கலான மோதல் ஆகும். உண்மையாக போரை யார் தொடங்கினர், யார் சரி என்பது அனைத்தும் தவறான முகமூடிகள் மூலம் மட்டுமே பார்க்கப்படுகின்றன. ஐரோப்பாவின் கடைசிப் போராக இது இருக்குமா என்பது கேள்விக்குறியே)

நேட்டோ (NATO) அமைப்பு ரஷ்ய எல்லையை நோக்கி விரிவடைவதைத் தடுத்து, தன் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த ரஷ்யா இந்த போரை நடத்துகிறது. சோவியத் யூனியன் உடைந்த பிறகு உக்ரைன் தனது சுதந்திரத்தை அறிவித்ததிலிருந்து, சில ரஷ்ய தலைவர்கள் உக்ரைன் ரஷ்யாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள்.

உக்ரைன் மற்றும் சர்வதேச பார்வையில் உக்ரேனிய இறையாண்மை மீறலானது ஊடகங்களில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் ஒரு சுதந்திரமான நாடு மற்றும் அதன் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் உரிமை அதற்கு உண்டு. எனவே, ரஷ்யாவின் தாக்குதல் அதன் இறையாண்மையை நேரடியாக மீறுவதாக மேற்கு ஐரோப்பிய நாடுகளால் குற்றஞ் சாட்டப்பட்டு



# புதிய உலகின் யதார்த்தங்கள்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பார்க்கப்படுகிறது.

பல ஐரோப்பிய நாடுகள், உக்ரைனின் இறையாண்மையையும், எல்லைகளையும் மீறி ரஷ்யா போரைத் தொடங்கி நடாத்துவது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது எனக் கருதுகின்றன. ஆனாலும் இந்த போர், உக்ரைன் மற்றும் ரஷ்யா இரு நாடுகளின் இறையாண்மையையும் பாதித்துள்ளது. இந்த போர், ரஷ்யாவிற்கு ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

அணு ஆயுதங்களை பயன்படுத்தும் அனுமதியை ரஷ்ய அதிபர் புதின் வழங்கும் வரை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த போர், உலகளவில் புவிசார் வியூக முக்கியத்துவத்தை மாற்றியுள்ளது.

சுருக்கமாக, ரஷ்ய-உக்ரைன் போர் என்பது, இறையாண்மை என்ற கருத்தை மையமாக வைத்து, இரண்டு நாடுகளின் சுயநிர்ணய உரிமை மற்றும் தேசிய நலன்களைப் பற்றிய ஒரு சிக்கலான மோதல் ஆகும்.

இன்றைய சூழ்நிலையில் இப்போரை பொறுத்தவரை, ரஷ்யர்களின் வீழ்ச்சியடைந்து வரும் நிலைகளை அமெரிக்கமூலோபாயவாதிகள் சோவியத் ஒன்றியத்திற்கு எதிராகப் பயன்படுத்திய பழைய நிகழ்ச்சி நிரலுக்கு ஒப்பானதாகும்.




முதலில் ரஷ்யாவை பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்துதல், ரஷ்ய உயரடுக்கையும் நடுத்தர வர்க்கத்தினரையும் ரஷ்ய தலைமையை எதிர்த்து வெறுப்படைய செய்தல், தலைமையை கேலி செய்து நாட்டை பாலைவனமாக்குதல், போன்ற முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டு வந்தது.

முன்பு யூகோஸ்லிவியாவை துண்டாடியது போலவே ரஷ்யாவை துண்டாட அமெரிக்க அரசும் உளவுத்துறையும் முயன்றது. ரஷ்யாவை நேரடியாக எதிர்த்து நிற்க முடியாததால், அயல் நாடுகள் மூலமாக அமெரிக்க போரை நடத்த வேண்டிய சூழல் உருவானது. இந்த அயல் நாட்டு போரியல் தந்திர செயல்முறை யெல்ட்சினுக்குப்பிறகுதான்தொடங்கியது. ரஷ்ய-உக்ரைன் எல்லைகளிலும், போல்டிக் நாட்டு எல்லைகளிலும் இத்தகைய போரியல் தந்துரோபயத்தை அமெரிக்க உளவு அமைப்புகள் உருவாக்கின.

சோவியத்தின் ஆப்கான் படையெடுப்பு காலத்தில், மேற்கு நாடுகள் பாகிஸ்தானை ஒரு வழியாகவும், ஆப்கானிஸ்தானை ஒரு வழியாகவும் பயன்படுத்தி ரஷ்ய படைகளை பாரிய அளவில் அழித்தனர்.

இதே போன்ற சூழலை ரஷ்யாவின் கோக்கஸ் மலைகளிலும், செர்ச்னிய போர்களில் அமெரிக்கா மூக்கை நுளைக்க முயன்றது. ஆயினும் இந்த போர்களில் ரஷ்யா வெற்றியை ஈட்டியது. ஆனாலும் இந்த போர்களால் காக்கஸில் உள்ள மக்களுக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டன.

இதன் பின்னரே ரஷ்யாவின் மேற்கு எல்லைகளில் புதிய போர் முன்னணி திறக்கப்பட்டது. 2014 இல் ரஷ்ய-உக்ரைன் மோதல்கள் தீவிரமாகி, இறுதியில் போர் தொடங்கியது.

2022 ஆம் ஆண்டிலேயே ரஷ்யர்களுக்கு மனிதவளம், பொருளாதாரம், இராணுவ வளம் பாரிய நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டது. உக்ரேனியர்களுக்கு மொத்த பேரழிவு ஏற்பட்டது போல, இந்த போரால் பெரும் விலையை செலுத்த வேண்டியிருந்தது.

## புதிய உலகின் யதார்த்தங்கள்:

இந்த போரின் விளைவாக, உலகின் சீனாவை மூன்றாவது பெரிய சக்தியாக மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல-துருவ புதிய உலக ஒழுங்கை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும் சரி, ஏன் ஐரோப்பாவிலும்கூட புதியஜனநாயகவாதிகள் ( நியோ-கன்சர்வேடிவ்கள்) அடிப்படையில் வலுவான பழமைவாத வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றி வருகிறார்கள். குறிப்பாக ரஷ்யாவிற்கு எதிரானதுடன், உள்நாட்டில்தாராளவாத கொள்கையை பின்பற்றி வருகிறார்கள்.

முக்கியமாக யூத கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்ட போலந்து அல்லது ரஷ்ய குடியேறிகளின் ஆதரவை பெருக்கி முன்னைய காலத்தில் இருந்த சோவியத்எதிர்ப்புபிரச்சாரத்தைமீண்டும் ரஷ்யாவிற்கு எதிராக தொடர்கின்றனர்.

ஆயினும்புதியஉலகின்யதார்த்தங்கள் பழைய ஐரோப்பிய பனிப்போர் சகாப்தத்தின் நிலைமையைப் போலவே அல்ல. அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ ரஷ்ய எதிர்ப்பு நிலைப்பாட்டை இனி தொடர்ந்து செய்ய முடியாது. ஆனாலும் 2014இன் தொடக்கத்தில் இருந்தே ரஷ்ய எதிர்ப்பு பிரச்சாரத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் பழைய பெரிய சக்திகளான ஜெர்மனி-பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து தொடர்ந்தும் ரஷ்ய விரோத போக்கை கடைபிடித்து வருகிறது. ஆனாலும் சீனா-ரஷ்யா கூட்டாண்மை புதிய உலக ஒழுங்கில் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக மாறியுள்ளது.

உக்ரைனில் போர் முடிவுக்கு வருவது மட்டுமே அமெரிக்காவிற்கு போதுமானது என்று கருத முடியாது. ரஷ்யாவிற்கு எதிரான மூலோபாய ரீதியாக திருப்திகரமான ஒப்பந்தம் அவசியம் என ஜெர்மனி-பிரான்ஸ்-இங்கிலாந்து இணைந்து கோரி வருகின்றன.

குறைந்தபட்சம் ஐரோப்பிய ஒன்றியத்திலாவது இந்த நாடுகள் ஒரு தீர்க்கமான சக்தியாக இருக்க



வேண்டுமென்றால், இந்த போரில் தங்கள் பக்க பலத்தை வெளிப்படுத்தி ஒருவித பங்கைக் காட்ட விரும்புகின்றனர்.

ரஷ்யாவை ஐரோப்பாவில் ஒரே வல்லரசாக மீண்டும் உருவாகிக் கொள்ளஅமெரிக்காவோ , ஐரோப்பிய நாடுகளோ ஒருபோதும் விரும்பாது என்பது திண்ணம்.

## ரஷ்ய-உக்ரைன் போர் இறையாண்மை.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, பிப்ரவரி 2022 முதல் ரஷ்ய-உக்ரைன் போர் தொடங்கியதிலிருந்து பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் போரின் ஆரம்பம், தொடர்ச்சி, இப்போதய சூழலில் முடிவு ஆகியவற்றிற்கு கேள்விகள் எழுகின்றன, ஆனால் பதில்கள் எதுவும் இல்லை என்பது தெளிவாகிறது.

உண்மையாக போரை யார் தொடங்கினர், யார் சரி என்பது அனைத்தும் தவறான முகமூடிகள் மூலம் மட்டுமே பார்க்கப்படுகின்றன. ஐரோப்பாவின் கடைசிப் போராக இது இருக்குமா என்பது கேள்விக்குறியே.

உண்மையில் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் முரட்டுத்தனமான கண்ணோட்டங்களைக் கொண்ட அரசியல் வாதிகளுக்கு, போர் தொடங்குவதற்கு முன்பே, உலகை அடுத்த கட்ட ஒழுங்கிற்குள் கொண்டு செல்ல ஒருவித பல சோதனை அவசியம் என்பது தெளிவாகத் தெரிந்தது. அதை ரஷ்யாவை தோற்கடித்து புதிய உலக ஒழுங்கு மாற்றத்தை உருவாக்க முடியும் என்று நம்பினர்.

வரலாற்றில் ரஷ்யாவுடன் நீண்டகாலமாக போட்டியிடும் சக்திகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான ஜெர்மனி-பிரான்ஸ், இங்கிலாந்து அவற்றின் மூலோபாய கொள்கை நிலையில் இன்னமும் வலுவாக உள்ளன. இதன் விளைவாகவே இந்த போர் உருவாக்கப்பட்டது என்றும் அரசியல் வல்லுநர்களால் கருதப்படுகிறது.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2025இல் வெளியிடப்பெற்றது